[22nd February 1955

THE HON. SRI B. PARAMESWARAN :—" I am sorry for the insinuation made by the hon. Deputy Leader of the Opposition, and I do not think that it is correct. However, the matter is being examined."

SRI P. RANGASWAMI REDDIAR :—" What are the functions of this Information Centre? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" It is intended to spread religious knowledge."

SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, கனம் மந்திரி அவர்களுடைய வாய் நான் சொல்வதை மறுத்தாலும்கூட அவரது முகம் அந்தக் குற்றச்சாட்டை ஒப்புக் கொள்ளுகிறது ? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" I do not think the hon. Deputy Leader of the Opposition should indulge in such a language."

SRI M. KALYANASUNDARAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, அது ஒருபுறமிருக்கட்டும். நான் சொன்ன இந்த ஸ்தாபனம் ஒரு வேலையும் செய்வது கிடையாது, ஒரு உள்ளிட்ட நோக்கத்தைக் கொண்டே இது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மை. இப்படிப் பொதுப் பணம் விரயம் ஆகாமல் இனிமேலாவது சர்க்கார் கவனிப்பார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" No, Sir, that institution is doing very useful work and, therefore, no money has been wasted."

Pathway to Kadukaval village.

* 710 *Q.*—SRI S. RAMALINGAM : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the Harijans of Kadukaval, Kadakadappai Vattam, Tanjcre taluk, asking for the provision of a pathway for their village ; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI B. PARAMESWARAN :—" (*a*) & (*b*) A petition from one Samiayya and two other Harijans was received by the Collector of Tanjore in November 1953. As the cheri is owned by a Mirasdar and as about 3 furlongs of wet lands have to be acquired for the provision of pathway, the Collector considered it not worthwhile to acquire wet lands to provide a pathway."

SRI S. RAMALINGAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் ' கடுக்காவல் ' கிராமத்திலுள்ள சேரியிலிருந்து ஹரிஜனங்கள் ரோடுக்கு வருவதற்கு ஒரு நடைபாதை வைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் சமீபத்தில் அந்தச் சேரிக்குப் பக்கத்தில் நிலமுள்ளவர்கள் அந்த நடைபாதையை வேலியைப் போட்டு அடைத்துவிட்டார்கள். அதனால் ஹரிஜனங்கள் சாலைக்கு வரமுடியாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கனம் முதல் மந்திரி ஸ்ரீ காமராஜ் அவர்கள் தஞ்சைக்கு விஜயம் செய்த பொழுது அந்தச் சேரி வாசிகள் ஊர்வலமாகச் சென்று ஸ்ரீ காமராஜரைப் பேட்டிக் கண்டு தங்களுக்கு நடைபாதை வசதி செய்து தரவேண்டுமென்று

22nd February 1955]

மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அந்த மகஜரின் நகல் ஒன்றும் எனக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதையும் நான் கனம் மந்திரி அவர்களுக்கே அனுப்பிவைத்திருக்கிறேன். கனம் காமராஜ் அவர்கள், நடைபாதையை நிச்சயமாக அடைத்துவிட்டால் உங்களுக்கு நடைபாதை வசதிக்கு உடனடியாக நிலத்தை 'அக்வயர்,' பண்ணியாவது கொடுப்பதாக, வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அம்மாதிரி வாக்குறுதி கொடுத்து 6 மாத காலமாகியும் இனியும் அவர்களுக்கு நடை பாதை வசதி செய்து கொடுக்கப்படவில்லை. காரணம் நஞ்சை நிலமாக இருப்பதினால் 'அக்வயர்' பண்ண முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். இனியும் அப்படிச் சொல்லாமல் உடனடியாக நஞ்சை நிலமாக இருந்தாலும்கூட 'அக்வயர்' பண்ணி ஹரிஜன மக்களின் வசதியை உத்தேசித்து நடைபாதை போடப்படுமா என்று கேட்கிறேன்."

THE HON. SRI B. PARAMESWARAN :—" Acquisition proceedings are taken to acquire the dry lands quite adjacent to this place for these people."

SRI S. SWAYAMPRAKASAM :—" A principle has been involved in the answer given by the Hon. Minister. Suppose there is a village without any pathway to appreach the main road. Necessarily lands have to be acquired to provide the pathway leading to that road. Under these circumstances, will the Government consider the desirability of providing a pathway so as to enable the people to approach the main road through it? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" There is some other way and that is why the Government are taking acquisition proceedings for acquiring dry lands quite adjacent to this place."

SRI A. K. SUBBIAH :—" ஹரிஜனங்கள் வெளியில் போகமுடியாமல் நடைபாதையை வேலிப்போட்டு அடைத்திருக்கும் நபர் யார் என்பதை கனம் மந்திரி அவர்கள் சொல்வார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" I have no information now."

SRI M. NARAYANA KURUP :—" Are the Government not aware that the usefulness of a pathway cannot be measured in terms of money? And will the Government take immediate steps to reopen the way which was being used for a very long time."

THE HON. SRI B. PARAMESWARAN :—" The pclicy of the Government is to acquire dry lands wherever necessary and if dry lands are not available they will go in for wet lands. Here dry lands are available and acquisition proceedings are already being taken."

SRI A. RATNAM :—" ஹரிஜனங்கள் சேரிகளுக்குப் போகமுடியாதபடி நடைபாதையை வேலி போட்டு அடைத்த நபர் மீது எந்த நடவடிக்கையாவது எடுக்கப்பட்டிருக்கிறதா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" That question does not arise at all."

SRI V. BALAKRISHNAN :—" ஹரிஜனங்களுக்கு நடைபாதை போட்டுக் கொடுப்பதற்காகவே சர்க்கார் ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கிவைத்து உதவி செய்து வருகிறார்கள் என்பது உண்மையா ? "

[22nd February 1955

THE HON. SRI B. PARAMESWARAN :—" உண்மைதான்."

SRI S. RAMALINGAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, அந்தச் சேரிப்பக்கத்தில் டிரை லாண்டு இருக்கிறது என்றும் அதனால்தான் நஞ்சை நிலத்தை 'அக்வயர்' பண்ணவில்லையென்றும் கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். சேரிக்கும் ரோடுக்கும் பாதை போட்டால்தான் ஹரிஜன மக்களுக்கும், அந்தச் சேரியிலுள்ள கால்நடைகளுக்கும் போக்குவரத்து சுலபமாக ஏற்படும். ஊருக்குப் பக்கத்தில் பாதையிருக்கிறதா, வெகு தூரத்தில் பாதையிருக்கிறதா, நஞ்சை நிலமாக இருக்கிறதா, டிரை லாண்டு இருக்கிறதா என்று பார்க்காமல் உடனடியாக அந்தச் சேரியையும், மெயின் ரோடையும் இணைக்கும் பாதை போட்டுக்கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா ? இடையில் நஞ்சை நிலமாக இருந்தாலும் அந்த நிலத்தை 'அக்வயர்' பண்ணி சேரி மக்களின் நலனைக்கருதி இனியும் கால்தாமத மின்றி அந்த ரோடை போடுவார்களா ? என்று கேட்கிறேன் "

THE HON. SRI B. PARAMESWARAN :—" As I said, we are doing our best to see that the pathway is provided for those people. What further assurance the hon. Member wants, I cannot understand."

8-40 a.m. DR. K. B. MENON :—" Sir, may I know whether the question of acquiring wet or dry lands is merely a matter of economy or does it involve the question of the convenience of the people concerned? Also, if the road has been used for some time, even if it be wet land, should it not be acquired? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" No, Sir. That is not the policy of the Government."

SRI P. VENKATESHA SHOLAGAR :—" ஏற்கெனவேயே அங்கு நடைபாதை இருந்தது. அந்தப் பாதையை வெட்டி, கெடுத்துவிட்டு 'இப்பொழுது வயல் ஆகிவிட்டதால் பாதை போட முடியாது' என்று சொல்வது சரியல்ல. ஏற்கெனவே இருந்தபடி நடைபாதையைத் திரும்பவும் அமைத்துக்கொடுக்கவேண்டியதுதான் நியாயம் என்பதை அரசாங்கம் ஒத்துக்கொண்டு, அதற்கான ஏற்பாடுகளைச்செய்ய முயற்சிப்பார்களா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, the Government are satisfied that the land in question is wet land and it cannot be used for a pathway. Therefore, when there is dry land available, I do not see any reason why the hon. Members here should insist upon wet land being made available for the purpose of a pathway. If there is no dry land available, then the question of acquiring wet land arises."

SRI K. ARANGANATHAN :—" உணவு விஷயத்தில் இப்பொழுது நம் ராஜ்யம் சுயதேவைப் பூர்த்தி அடைந்துவிட்டபடியால் நஞ்சை நிலமாக இருந்தாலும் பாதைகள் போடுவதற்கு நஞ்சை நிலங்களும் வாங்கப்படலாம் என்று அரசாங்கத்தின் கொள்கையை மாற்றிக்கொள்ளலாம். நஞ்சை நிலத்தின் வழியாக பாதையை அமைக்கவேண்டியிருப்பதால் அதற்கு வேண்டிய நிலத்தை வாங்கி ஏன் பொதுமக்களுக்கு வழங்கக்கூடாது ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, I have already sufficiently answered this question and I do not propose to answer any further questions."

SRI M. KALYANASUNDARAM :—" புதிதாக ஒரு நஞ்சை நிலத்தை நடைபாதையாக மாற்றவேண்டுமென்று யாரும் கூறவில்லை. அந்த நிலம் ஏற்கெனவே ஹரிஜனங்களுக்கு விடப்பட்டிருந்தது. நிலத்திற்கு

22nd February 1955]

சொந்தக்காரராக இருக்கக்கூடியவர் காங்கிரஸ் கட்சியில் தனக்குள்ள செல்வாக்கை உபயோகப்படுத்தி இப்பொழுது தடை செய்திருக்கிறார்கள். அவருடைய பெயரை வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராயிருக்கிறோம். அவர் ஜில்லா போர்டு காங்கிரஸ் கட்சி தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். அவர் செல்வாக்கை உபயோகப்படுத்தி ஹரிஜனங்கள் உபயோகித்துக்கொண்டிருந்த நடைபாதையைத் தடைசெய்திருக்கிறார். அந்த நடைபாதை மீண்டும் கிடைப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுபபார்களா ?"

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, the Government could not tolerate the use of any land by any particular set of people. This was not a regularly constructed pathway. The Harijans were just passing through that small strip. It was not a regular pathway."

SRI M. NARAYANA KURUP :—" Sir, may I know whether the Government have considered the legal question whether the Harijans have acquired a prescriptive right of pathway over this property? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, we need not go into the legal aspect now. Wherever it is possible, Harijans are provided with a pathway. First, we try to acquire dry land and if it is not available, wet land is acquired."

SRI S. SWAYAMPRAKASAM :—" Sir, it has been admitted that the land in question belongs to a particular person and that it cannot be used as a pathway. So, it is clear that there is no pathway for the villagers now. Will the Government now at least consider this aspect and see that some pathway is provided for these villagers? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Yes, Sir. We will certainly see that a pathway is provided for these Harijans."

SRI V. MUTHU :—" புஞ்சை நிலம் இருக்கிறதா என்பதைப் பார்த்து நடைபாதைக்கு ஒதுக்குவதற்கு முயற்சி செய்வதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். அந்த இடத்தை ஒத்துக்கொள்வதற்கு சேரி ஜனங்கள் விருப்பப்படுகிறார்களா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, this question does not arise now. When acquisition proceedings have been started, they will have to accept it."

SRI M. P. PERIYASWAMY :—" இம்மாதிரி பல இடங்களில் ஹரிஜனங்கள் நீண்ட நாட்களாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சுதந்திர சர்க்கார் ஏற்பட்ட பிறகுதான் ஹரிஜனங்களுக்கு இடம் விடாமல் தடை செய்துவருகிறார்கள். ஏற்கெனவே இருந்த பாதையை திரும்பவும் அமைப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா, அல்லது தடை செய்வதற்கு அனுகூலமாக இருப்பார்களா என்று தெரிய விரும்புகிறேன். "

THE HON. SRI B. PARAMESWARAN :—" தடை இருந்த நிலங்களில் ஹரிஜனங்கள் போய்க்கொண்டிருப்பார்களானால், அதை இப்பொழுது நிவர்திசெய்து சரியான முறையிலே அவர்கள் போவதற்கு வழிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். "